# ECONOMIC SITUATIONS OF WIDOWS – A SOCIOLOGICAL STUDY BASED ON KOMMATHURAI WEST VILLAGE

**Mrs.Kirushanthini Manivannan**

Graduate Trainee, Eravur Pattu Divisional Secretariat
kshanthi1991@gmail.com

**Abstract**

Nowadays, Women have to face a variety of problems in the community, it is effected directly and indirectly them by Individual, Family, school out Environment, Workplace, Religious Institutions and Religious foundation. In this context, it is necessary to finding out the motivating causes for this issue in the society. In this way, the problem of the widows is considered as social issue. Really this problem in the society affects not only the particular woman but also other women who live in the society. Moreover, it makes them economically weak and necessitated us to make a research on them.According to the paper, "Economic Situations of Widows – A sociological study based on Kommathurai West Village". The mentally affected widows in the village are unable to bring up and look after their children, not meeting psychiatrist for their grievance. It is necessary to identify and make the needful livelihood opportunity for the widows who lost the spouse by war/ Nature. If this primary action is not made for their survival, it will be inevitable to face and undergo into economical crisis and many other issues by the widows and children. So this research on widows is very important. More, how the widows are affected by poverty at the Kommathurai West Grama Niladaies division and what kinds of the problems do they face in the society. Therefore, this research is made to properly identify those, find the solution for them and empower the widows headed families in the society. The data for this research is gathered by using questionnaires, interview and field researches. They were analyzed by the manner of quantity and nature as a result of this research, it was identified that the poverty is influenced in the lives of the widows in the community. Therefore, this research is important and focused to identifying the reasons for the poorest living status of the widows at the particular division.

**Keywords**: Widow, Poverty, Career, Income

## 1. ஆய்வு அறிமுகம் (Introduction)

பெண்களின் கல்வி, கலாசார, பொருளாதார, அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நாட்டிலும், குடும்பங்களிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதை காணலாம். ஆனாலும் பெண்கள் ஏதோ ஒரு வகையில் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். எவ்வாறாயினும் பெண்களும் மனிதர்களாக வாழ வேண்டும், தங்களது வாழ்வியல் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதன் மூலம் வாய்ப்புக்களையும், வளங்களையும் பெற்று அவர்களது வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று போராடும் பெண்களும், நிறுவனங்களும், தனிப்பட்ட மனிதர்களும் நாளாந்தம் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது குடும்ப பொறுப்பு அதிகரித்துள்ள சூழ்நிலையில் வருமானத்தை தேடுதல், பிள்ளைகளைப் பராமரித்தல், கல்வி கற்பித்தல், தாங்களும் கற்றல், சொத்துக்களை சேர்த்தல் என்பவை பெண்கள் சார்ந்ததாகவுள்ளது. இவ்வாறான நிலையில் அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் குடும்பப் பிரச்சினைகளை சமாளிப்பது பெரும் சிக்கலாகவுள்ளது.[1] எமது சமூகத்தில் பெண்கள் பொதுவாக இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்கள் (Vulnerable group) என்ற நிலையிலுள்ளது. இதற்குக்

[1] குணா, 2012, பெண், (தொகுதி-17, இலக்கம்-02), பக்: 7

காரணம் சமூகத்தில் நிலை நிறுத்திக் கொண்டிருக்கும் பால்நிலைப் பாகுபாடு எனலாம். அதாவது ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே நிலவும் சமசந்தர்ப்பங்கள், சமவாய்ப்பு, சமவளப்பகிர்வு என்பவற்றில் காணப்படுகின்ற அசமத்துவத் தன்மையாகும்.[2] அந்தவகையில் கணவனை இழந்த பெண்கள் முகங்கொடுக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளில் மிக முக்கியமானது பொருளாதார ரீதியான பின்னடைவாகும்.

அடிப்படைத் தேவைகளையேனும் பூர்த்திசெய்ய முடியாதிருக்கின்ற நிலை வறுமையாகும். இது முன்னேற்றமடைந்துவரும் சமூகங்களில் மட்டுமல்ல முன்னேற்றமடைந்துள்ள சமூகங்களிலும் காணப்படுகின்றது. ஆயினும் அவை ஏற்படுத்துகின்ற விளைவுகள் வேறுபடுகின்றன. அதனால் வறுமையினால் ஏற்படும் சமூக, உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்களின் தீவிரத் தன்மையும் மாறுபடுகின்றன. இவ்வறுமையின் பிடியில் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக கணவனை இழந்த பெண்கள் காணப்படுகின்றனர். வறுமை, வருமானம் போதாமை, நிரந்தர தொழிலின்மை, தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை, கடன்கள், உதவிகளுக்காக காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம், பௌதீக ரீதியான வளப் பற்றாக்குறை என்பவற்றினால் கணவனை இழந்த பெண்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் பாதிக்கப்படுகின்றனர்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்த நிலையில் அவர்கள் முகங்கொடுக்கும் சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகள், தாக்கங்கள் போன்றன பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை. பெண் தனித்து தனது குடும்பத்தினை நடாத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளும், அதன் மூலம் அப்பெண்ணுக்கு ஏற்படும் நேரடியான பாதிப்புக்களும், அதன் விளைவுகளும் என்ற ஒரு நிலையும், மற்றையது இதன் விளைவால் அவர்கள் சார்ந்த சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள் என இரு கோணங்களில் பார்க்க முடியும்.[3] அதாவது கணவனை இழந்த பெண்கள் தமது குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தால் தொழில் நிமிர்த்தம் தங்களை மேலும் தயார்படுத்த வேண்டிய நிலைக்கு ஆட்படுகின்றனர். இதனால் அவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. சமூக ரீதியான அந்தஸ்து, சுயமதிப்பு என்பவை பாதிக்கப்படுகின்றது. இத்தகைய நிலைகளினால் உடல் மற்றும் உள ரீதியாக இப்பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். மேலும் இவர்கள் சார்ந்த குடும்பத்தினரும் இத்தகைய பாதிப்புக்களை எதிர்நோக்கவேண்டிய நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டே ''கணவனை இழந்த பெண்களது பொருளாதார நிலைமைகள்- கொம்மாதுறை மேற்கு கிராமத்தினை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு'' என்ற தலைப்பின் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ் ஆய்வின் மூலமாக பெறப்படுகின்ற முடிவுகள் மூலம் குறித்த கிராமத்தில் கணவனை இழந்த பெண்கள் வறுமையினால் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைக் கண்டறிந்து, பாதிக்கப்பட்ட பெண்களை ஓரளவேனும் தாக்கத்திலிருந்து மீட்டு அவர்களை வலுவூட்ட துணைபுரியும் என்ற நம்பிக்கையிலே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 2. இலக்கிய மீளாய்வு (Literature View)

இலக்கிய மீளாய்வு என்பது ஆய்வுப்புலம் சார்ந்த இலக்கியங்களுடன் சம்பந்தப்பட்டதாகவும், கொள்கைசார் கண்ணோட்டங்களைத் தெளிவுபடுத்தலாகும். ஆய்வுத் தலைப்புடன் சம்பந்தப்பட்ட ஆய்வு வினாக்கள், ஆய்வுப்

[2] காயத்திரி, ந. 2011, சொல் (பெண்ணியத்தின் மகத்துவம்), இரண்டாம் அரையாண்டு, பக்: 48

[3] காயத்திரி, ந. 2011, சொல் பெண்ணியத்தின் மகத்துவம் (இரண்டாம் அரையாண்டு), பக்: 48

பிரச்சினை, ஆய்வுக் கருதுகோள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கருத்துக்களுடனும், வாதங்களுடனும் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளலாகும். ஆய்வுப் பொருளுடன் சம்பந்தப்பட்ட பிரதான கோட்பாடுகளையும், வாதங்களையும், கருப்பொருட்களையும், முறையியல்களையும், அணுகு முறையியல்களையும், ஆய்வு இலக்கியங்களிலுள்ள மாறுபட்ட கருத்துக்களையும் விபரித்தலும், ஒப்பிடுதலும், வேறுபாடு காணலும், மதிப்பிடலும் இலக்கிய மீளாய்வில் இடம்பெற்றிருக்கின்றது. ஆய்வுப் பொருளோடு தொடர்புபட்ட சூழமைவையும், வாதங்களையும் நிறுவுவதற்கான சான்றாதாரக் கூறுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு செயன் முறையை இலக்கிய மீளாய்வு எனலாம்.[4]

## 2.1. நூல்கள்

**குமுதினி, சா. (2000)-** நோக்கிலான பெண் எனும் நூலில் ''இலங்கையில் பெண்களும், ஆயுதப் பிணக்குகளும்'' எனும் தலைப்பில் இலங்கையின் வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட ஆயுதப் பிணக்குகள், அதன் விளைவால் உருவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அக்குடும்பங்களின் நிலைப்பாடுகளும், பிரச்சினைகளும், பெண் தலைமையிலான குடும்பங்களின் புவியியல் ரீதியிலான பரம்பலும், அமைவிடமும், குடும்பத் தலைவர்களின் நிலை போன்ற பல விடயங்களை ஆய்வு செய்து வெளியிடுவதாக நூலிலுள்ள இக்கட்டுரை அமைகின்றது.[5] வரலாற்று ரீதியாக பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகிய தன்மை, பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிரச்சினைகள், நிலைப்பர்டுகள் தொடர்பாக விளங்கிக் கொள்ள ஆய்வாளருக்கு உதவுகின்றது. இப்பகுதியில் விரிவாக ஆராயப்படாத கணவனை இழந்த பெண்களது வறுமை நிலை தொடர்பாக ஆராய்வதாகவே இவ்வாய்வுள்ளது.

**சரோஜா, சி. (2013)-** வட மாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எனும் நூலானது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பற்றிய வரைவிலக்கணம், தீர்வுக்கான உபாயங்கள் மற்றும் முன்மொழிவுகள், அரசாங்கம் முன்னெடுத்துவரும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், அபிவிருத்திச் செயற்பாடுகளில் பெண்கள் தொடர்பான அணுகுமுறையினை ஒருங்கிணைத்தல் என்பவற்றையும், வடமாகாணத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பாக கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெண்கள் தலைமை தாங்குவதற்கான காரணங்கள், பகுப்பாய்வுகள், கவனத்தில் எடுக்கவேண்டிய விடயங்கள் மற்றும் காணப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்ட நூலாக அமைகின்றது.[6] இவ்வாய்வு நூலானது ஆய்வாளர் ஆய்வை முன்கொண்டு செல்ல உதவுவதாகவுள்ளது. மேலும் கணவனை இழந்த பெண்களது பொருளாதார நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதாகவே இவ்வாய்வுள்ளது.

**ஜெகன், பெ (தமிழாக்கம்- இந்திரா, கோ.)** – பெறுபேறற்ற யுத்தமும், அதில் மனித இழப்புக்களும் எனும் நூலில் ''விதவைகளும், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களும்'' எனும் தலைப்பின் கீழ் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படல், பொருளாதார இழப்புகள், பௌதீக உளவியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகுதல் போன்ற விடயங்கள் பற்றியும், விதவைகளாக்கப்பட்ட பெண்கள் தொடர்பாகவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[7]

---

[4] கலாமணி, த. 2014, கடல், இதழ்-07, ''இலக்கிய மீளாய்வை விளங்கிக் கொள்ளல்'', பக்: 32

[5] குமுதினி, சா. (2000), நோக்கிலான பெண், ''இலங்கையில் பெண்களும், ஆயுதப் பிணக்குகளும்'', பக்:45-91

[6] சரோஜா, சி. (2013), வட மாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், பக்: 01- 118

[7] ஜெகன், பெ (தழிலாக்கம்- இந்திரா, கோ.), ''பெறுபேறற்ற யுத்தமும், அதில் மனித இழப்புக்களும்'', பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், பக்: 5-6

இந்நூலில் விரிவாக ஆராயப்படாத கணவனை இழந்த பெண்கள் தொடர்பான விடயங்களை ஆராய்வதாகவே இவ்வாய்வுள்ளது.

**2.2. சஞ்சிகைகள்**

**உதயனி. ந (2011)-** சொல் எனும் இரண்டாம் அரையாண்டு சஞ்சிகையில் ''யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களின் பிரச்சினைகள்'' எனும் தலைப்பின் கீழ் கணவனை இழந்த பெண்களின் நிலை, அப்பெண்கள் பொருளாதார ரீதியாக, சமூகப் பார்வை ரீதியாக மற்றும் உள ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள், மறுமணம் குறித்த விடயங்கள் பற்றி நோக்கியுள்ளது. [8] இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் பொருளாதார ரீதியிலாக கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்புள்ளதாக ஆய்வினை மேற்கொள்ள துணைபுரிகின்றது.

**உதயனி. ந (2012)-** நங்கை என்ற சஞ்சிகையில் ''யாழ்ப்பாணத்துப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்'' என்ற தலைப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பம் பற்றிய வரையறை, தன்மை, இப்பெண் தலைமைக் குடும்பங்கள் அதிகரித்தமைக்கான காரணங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகும் விதம், அதன் தரவுகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பான வரலாற்றுப் பார்வை, மறுமணம் தொடர்பான கருத்துக்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள், இது தொடர்பாக பெண்கள் சார்ந்த நிறுவனங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பற்றிய கட்டுரையாக அமைகின்றது.[9] பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்குரிய தீர்வாலோசனைகள் ஆய்வினை முன்கொண்டு செல்ல உதவியாகவுள்ளது.

**காயத்திரி. ந (2011)-** சொல் எனும் இரண்டாம் அரையாண்டு சஞ்சிகையில் ''பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் நிலை'' எனும் தலைப்பிலே பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் உருவாக்கம், அப்பெண்களின் நிலைப்பாடுகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ளது.[10] ஆய்வாளர் ஆய்வினை முன்கொண்டு செல்ல உதவியாக அமைகின்றது.

**பத்மா, சோ. (1998)-** ''பெண்ணின் குரல்'' என்ற சஞ்சிகையிலே ''பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்'' என்ற தலைப்பின் கீழ் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், அதன் விகிதாசாரம், பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் பெருக்கத்திற்கான காரணங்கள், அது பற்றிய ஆய்வுத் தகவல்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வகைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.[11] ஆய்வு உள்ளடக்கத்திற்கு துணை புரிகின்றது. போரினால் விதவையாக்கப்பட்ட பெண்கள் தொடர்பாகவே அதிகம் ஆராயப்பட்டுள்ளது. இப்பகுதியில் விரிவாக ஆராயப்படாத கணவனை இழந்த பெண்களது பொருளாதார நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதாக இவ்வாய்வுள்ளது.

---

[8] உதயனி,ந. 2011, இரண்டாம் அரையாண்டு, சொல் (பெண்ணியத்தின் மகத்துவம்), ''யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களின் பிரச்சினைகள்'', பக்: 34-37

[9] உதயனி, ந. 2012, நங்கை (இதழ்-37), ''யாழ்ப்பாணத்துப் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்'', பக்: 17- 23

[10] காயத்திரி,ந. 2011, இரண்டாம் அரையாண்டு, சொல் (பெண்ணியத்தின் மகத்துவம்), ''தனித்துவிடப்பட்ட பெண்களினதும், குழந்தைகளினதும் வாழ்வாதாரச் சிக்கல்கள்'', பக்: 47-48

[11] பத்மா, சோ. 1998, பெண்ணின் குரல் (பெண்ணின் உரிமைக்கான இலங்கைச் சஞ்சிகை- இதழ் 17), பக்: 31-32

**பாலமதி, வ. (2012)-** ''நங்கை'' சஞ்சிகையில் ''பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் வாழ்வாதார செயற்பாடுகளும்'' என்ற தலைப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அதன் நிலைப்பாடு, எதிர்நோக்கும் பிரச்சினைகள், வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள், சிறந்த வாழ்வாதாரத் திட்டத்தின் தன்மை போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளது.[12] இப்பகுதியில் ஆய்வு உள்ளடக்கத்திற்கு துணைபுரிகின்றது.

**பிரியதர்சினி, இ. (2001)-** ''பெண்ணின் குரல்'' என்ற சஞ்சிகையிலே ''புதிதாகக் கட்டியெழுப்புதல்'' என்ற தலைப்பில் பொலனறுவை மாவட்டத்தின் இரு பிரதான கிராமங்களைச் சேர்ந்த எட்டு கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுத் தகவல்களைக் கொண்டு பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகுவதற்கான காரணங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் தரவுகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்கும் தன்மை பற்றிய ஆய்வுத் தகவல்களைக் கொண்ட ஆய்வுக்கட்டுரையாக அமைகின்றது.[13] இவ்வாய்வுத் தகவல்கள் ஆய்வை வழிநடத்த உதவுவதுடன், ஆய்விற்கான பரிந்துரைகளை வழங்க வழிகாட்டியாக அமைகின்றது.

**வாசுகி.ஜெ (1998)-** ''பெண்'' என்ற சஞ்சிகையில் ''மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்'' என்ற தலைப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் (குறிப்பாக கணவனை இழந்த பெண்கள்) தொடர்பாகவும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது.[14] இக்கட்டுரையில் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய விடயங்கள் ஆய்விற்கு துணைபரிவதாகவுள்ளது.

### 2.3. ஆய்வு அறிக்கைகள்

**நியோமி கோசைன் (Naomi Hossain) மற்றும் சாமிலா குடா (Samila Huda)** – "Problems of the women headed households" எனும் ஆய்வுத் தலைப்பின் கீழ் பங்களாதேஷின் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கமாக பெண்தலைமை தாங்கும் குடும்பங்களை இனங்காணலும், விளங்கிக் கொள்ளலுமாக அமைகின்றது. இவர்கள் வறுமைக்கு தள்ளப்படுவதற்கான காரணங்கள், பெண்கள் தலைமை தாங்க வேண்டிய நிலையை எவ்வாறான சமூகச் சூழல் உருவாக்குகின்றது?, சமூக விதிகளில் ஏற்படுகின்ற மாற்றம் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் தொடர்பாக துணைபுரிகின்றது?, பெண்கள் உரிமைகள் தொர்பான சரத்துகள் என்ற உபதலைப்புக்களுடன் கலந்துரையாடல் பகுதி அமைந்துள்ளது. விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், விவாகரத்து பெற்ற பெண்கள், தொழில் நிமிர்த்தம் புலம்பெயர்ந்து செல்லும் கணவனையுடைய பெண்கள் போன்றோர் இவ்வாய்விற்குட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் 18 பெண் தலைமை தாங்கும் பெண்கள் தொடர்பான தனியாள் பதிவேடு (Case Studies) ஆய்வறிக்கையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.[15] இவ்வாய்வு தொடர்பான விளக்கங்கள் ஆய்வாளருக்கு ஆய்வினை முன்னெடுக்க உதவுவதாக அமைகின்றது.

Fatemeh, Maleki. Mojtaba, Maleki. Mansoureh, Maleki. and Somayyeh, Mirziee. (2016 issue)- "Social, Cultural and Economic Situation of Female – Headed Households of Imam Khomeini Relief Committee (Tehran Province

---

[12] பாலமதி, வ. 2012, நங்கை (இதழ்-37), ''பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் வாழ்வாதாரச் செயற்பாடுகளும்'', பக்: 10-11

[13] பிரியதர்ஷினி, இ. 1998, பெண்ணின் குரல் (பெண்ணின் உரிமைக்கான இலங்கைச் சஞ்சிகை- இதழ் 17), பக்: 15-19

[14] வாசுகி, ஜெ. 1998, பெண், தொகுதி-III , இலக்கம்- 1, ''மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்கள்'', பக்:- 9-14

[15] Naomi, H. and Samila, H. (1995), "Problems of the women headed households", Pag: 1-47

2011)" என்ற ஆய்வுத் தலைப்பில் ஈராக்கின் தலைநகரான டேக்ரான் மாகாணத்தின் Imam Khomeini Relief Committee இல் 2011ஆம் ஆண்டினை மையமாகக் கொண்டு பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் சூழமைவுகளும், அவர்கள் எதிர்கொள்ளும் அடிப்படைத் தேவைகளும் எனும் பிரதான நோக்கத்தினை மையமாகக் கொண்டு இக்குடும்பங்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான நிலைமைகளைத் தீர்மானிக்கும் காரணிகளை ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.[16] ஆய்வாளரது ஆய்வு நோக்குடன் பொருந்துவதாகவுள்ளமையினால் ஆய்வினை வழிநடத்த உதவுகின்றது.

**2.4. பத்திரிகை**

**வாணி (15.03.2012)** –"தினமுரசு வார மலர்" பத்திரிகையில் "பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக நிலைமை" என்ற தலைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த தசாப்த காலத்தில் நடைபெற்ற யுத்தம் மற்றும் ஆழிப்ரேலையின் விளைவுகளால் உருவாகிய பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் சமூகக் கட்டமைப்பு மாற்றங்கள், அவர்கள் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும், சமூக நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்திக் கொள்வதில் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளும் போது ஏற்பட்ட அனுபவங்கள், மட்டக்களப்பு வாகரை, படுவான்கரை பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் நிலை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.[17] இக்கட்டுரை மட்டக்களப்பு மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பற்றி விளங்கிக் கொள்வதற்கு ஆய்வாளருக்கு உதவுகின்றது.

நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், பத்திரிகைகள் போன்றவற்றின் மூலம் ஆய்வுக்கு தேவையான விடயங்கள், குறிப்புக்கள் என்பன இலக்கிய மீளாய்வுக்காக பயன்படுத்தப்பட்டன. இவற்றிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள், புள்ளிவிபரங்கள், எண்ணக்கருக்கள், ஆலோசனைகள், விளக்கங்கள் அநேகமாக ஆய்வுடன் பொருந்தி போவதாகவும், ஆய்வினை வழிநடத்துவதாகவும் அமைந்துள்ளன. சில விடயங்கள் ஆய்வுடன் நேரடியாகப் பொருந்திப் போகாதவிடத்தும் அதனுடன் தொடர்புடையதாகவும் அமைந்துள்ளன. இன்னும் சில விடயங்கள் ஆய்வினை சீராகக் கொண்டு செல்லவும் உதவுகின்றன. மேலும் மேற்படி இலக்கிய மீளாய்வில் நோக்கப்பட்டுள்ள இலக்கியங்கள் ஆராயத் தவறிய, விரிவாக ஆராயாத விடயங்களையும் உள்வாங்கியதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

**3. ஆய்வுக் கருதுகோள் (Research Hypothesis)**

கருதுகோள் என்பது "ஒரு ஆய்வாளன் ஆய்வுப் பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கின்ற தற்காலிகமான ஒரு முடிவாகும்". ஓர் உண்மைக் கட்டமைப்பை நிறுவுவதற்கும், இருக்கும் கட்டமைப்பை நிராகரிப்பதற்கும் உதவுகின்ற படிநிலையாகக் கருதுகோள் அமைகின்றது.

"கணவனை இழந்த பெண்களது பொருளாதார நிலைமைகள் பின்தங்கிய நிலையிலேயுள்ளது" என்பது ஆய்வுக் கருதுகோளாக முன்வைக்கப்படுகின்றது.

---

[16] Fatemeh, Maleki. Mojtaba, Maleki. Mansoureh, Maleki. and Somayyeh, Mirziee. (2016 issue)- "Social, Cultural and Economic Situation of Female – Headed Households of Imam Khomeini Relief Committee (Tehran Province 2011)", Pag: 1598- 1607

[17] வாணி, (2012.03.15), தினமுரசு வார மலர், "பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக நிலைமை"இ பக்:17

**4. ஆய்வு நோக்கங்கள் (Objectives)**

ஆய்வு நோக்கம் என்பது ஆய்வு என்ன நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை பற்றியதாகும். இவ்வாய்வானது பிரதான நோக்கம், உப நோக்கம் என இரு அடிப்படையில் நோக்கப்படுகின்றது.

அவ்வகையில் இவ்வாய்வின் நோக்கங்களாக,

1. கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவ்வாறானது என அறிதல்.
2. அப்பிரச்சினைகளால் அவர்களுக்கு பொருளாதார ரீதியான ஏற்படும் பாதிப்புக்கள் எவை என்பதை அறிதல்.
3. இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து இயன்றளவு விடுபடுவதற்கான தீர்வாலோசனைகளை முன்வைத்தல். என்பவை முன்வைக்கப்படுகின்றது.

**5. ஆய்வு வினா (Research Question)**

ஆய்வு வினா என்பது ஆய்வுக் களத்தில் ஆய்வாளரால் முன்வைக்கப்படுகின்ற வினாக்களாகும். ஆய்வு வினாக்களை முன்வைக்கின்ற போதுதான் ஆய்வினை வெற்றிகரமாக செய்ய முடியும். அவ்வகையில் இவ்வாய்வில் முன்வைக்கப்படுகின்ற வினாக்களாவன.

1. கணவனை இழந்த பெண்கள் எவ்வாறாக பொருளாதார ரீதியாக பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்?
2. இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து விடுபடுவதற்கான வழிவகைகள் எவை? போன்றவையாகும்.

**6. ஆய்வு முறைமையியல் (Research Methodology)**

ஆய்வு முறைமையியல் என்பது பரந்துபட்டதொரு விடயமாகும். ஆய்வினைச் சரிவரச் செய்வதற்கும், முடிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் ஆய்வுமுறைமையியல்கள் அவசியமாகும். இது ஆய்வில் மிகவும் தெளிவாக அறிந்து விளங்கியிருக்க வேண்டிய விடயமாகும். ஒரு ஆய்வாளன் பொருத்தமான முறையியலைத் தெரிவு செய்தல் என்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே இவ்வாறான ஆய்வு விடயத்திற்கு ஏற்ப ஆய்வு முறைமையியலானது,

1. எண் ரீதியான ஆய்வு முறைமையியல்
2. தர ரீதியான ஆய்வு முறைமையியல்
3. இரண்டும் இணைந்தவாறான ஆய்வு முறைமையியல் ஆகியவற்றைப் பிரயோகிக்கின்றனர்.

இந்தவகையில் இவ்வாய்விற்கு சமூக விஞ்ஞானத்துறை சார்ந்த ஆய்வாக அமைந்துள்ளமையினால் எண் ரீதியானதும், பண்பு ரீதியானதுமான முறையியலைப் பயன்படுத்தி ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன. மேலும் இவ்வாய்வானது ஒரு விளக்க ஆய்வாகக் காணப்படுகின்றது. விளக்க ஆய்வு எளிமையானதாகவும், சகல விதமான சமூகப் பிரச்சினைகளைப் பற்றிக் கற்பதற்கும் சிறந்ததாக காணப்படுகின்றது. மேலும் இம்முறை ஒரு சூழ்நிலையை மற்றொரு சூழ்நிலையுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கு உகந்ததாக உள்ளமையினாலும் இவ்வாய்வில் பயன்படுகின்றது.

**7. தரவு சேகரித்தல் முறை (Data to be gathered)**

ஆய்வின் வெற்றியானது சேகரிக்கப்படும் தரவுகளின் வகை மற்றும் தரம் என்பவற்றில் தங்கியுள்ளது. தரவுகளின் நம்பகம் மற்றும் தகுதி ஆகிய இயல்புகள் தாழ்வாக அமையும் பட்சத்தில் எவ்வித உயர் நுட்பப் பகுப்பாய்வு உத்திகளைப் பயன்படுத்தினாலும் ஆய்வுப் பெறுபேறுகள் திறமையாகவும், பொருத்தமாகவும் அமைய

முடியாது.[18] ஆய்வு முறைமையியலில் தரவு சேகரிக்கும் முறை முக்கியமானதாகும். சேகரிக்கப்படும் தகவலின் சிறப்பிலேயே ஆய்வின் சிறப்பும் தங்கியிருக்கின்றது. இதன்படி இவ்வாய்விற்கான தகவல்களாக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத்தரவுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கணவனை இழந்த பெண்களிடம் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், வினாக்கொத்து முறைமை என்பனவற்றின் அடிப்படையிலும் ஆய்வாளரின் அவதானத்தின் அடிப்படையிலும் பெறப்படவுள்ளது. இதற்கமைய ஆய்வுப் பிரதேசத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக மாதிரி முறை மூலம் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இரண்டாம் நிலைத்தரவுகள் என்னும் வகையில் ஆய்வுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், பத்திரிகைகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து சேகரித்த புள்ளிவிபரத் திரட்டுக்களிலிருந்தும், மூன்றாம் நிலைத்தரவுகள் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டவுள்ளன.

8. தரவுப் பகுப்பாய்வு (Analysis)

தரவுப் பகுப்பாய்வு என்பது ஆய்வுப் பிரச்சினை தொடர்பாக ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களை விபரித்தல், விமர்சித்தல், ஒப்பீடு செய்தல் போன்றவற்றை குறித்து நிற்கின்றது. இது புள்ளிவிபரவியல் உத்திகளின் உதவியுடன் இடம்பெறுகின்றது. இதன் மூலமாகவே சமூகத்தில் புதைந்துள்ள உண்மைகள் கண்டறியப்பட்டு அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்மொழியவும், முடிவுகளை தெளிவுபடுத்தவும் முடிகின்றது.

இதற்கமைய ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஏறாவூர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை மேற்கு கிராமத்தில் ''கணவனை இழந்த பெண்களின் பொருளாதார நிலைமைகள்'' தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கான தரவுகளை சேகரிப்பதற்காக ஆய்வுப் பிரதேசத்தில் கணவணை இழந்த 193 பெண்களில் 45 பெண்கள் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன. இதில் 21-30 வயதுக்குட்பட்ட பெண்களில் 02 மாதிரிகளும், 31 - 40 வரையிலான வயது கொண்டவர்களுள் 06 மாதிரிகளும், 41 - 50 வரையிலான வயது கொண்டவர்களுள் 09 மாதிரிகளும், 51 - 60 வயது கொண்டவர்களில் 13 மாதிரிகளும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 15 மாதிரிகளும் தெரிவு செய்யப்பட்டு தரவுகள் ஆய்வுக்காக திரட்டப்பட்டன. மேற்கூறப்பட்ட அடிப்படையில் திரட்டப்பட்ட தரவுகளின் படி கணவனை இழந்த பெண்களின் பொருளாதார நிலைமைகள் பின்தங்கியுள்ளமை இனங்காணப்பட்டன.

**கணவனை இழந்த பெண்களது பொருளாதார ரீதியான பிரச்சினைகள்:-**

1. முறைசார்ந்த, தேர்ச்சி பெற்ற தொழில்களில் தம்மை ஈடுபடுத்த முடியாமை, நிரந்தர தொழில் வாய்ப்பின்மை மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லுதல்
2. வருமானம் போதாமை
3. கடன்கள்
4. பௌதீக ரீதியிலான வளப்பற்றாக்குறை

**8.1. நிரந்தர தொழில் வாய்ப்பின்மை**


உள்நாட்டில் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள இயலாமை, நிரந்தரத் தொழிலின்மை, முறைசார்ந்த, தேர்ச்சி பெற்ற தொழில்களில் தம்மை ஈடுபடுத்தக் கூடிய கல்வித் தகமை மற்றும்

[18] சின்னத்தம்பி, க. 2011, ''கல்வி ஆய்வியல்''. 2ம் பதிப்பு, பக்: 66

துறைசார் அறிவு போதியதாக இல்லாமை, குடும்பத்தினுடைய வறுமை, போதியளவு வருமானம் கிடைக்காமை போன்ற பல்வேறு காரணங்களினால் ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையிலுள்ளனர்.

Ma;Tf;Fl;gLj;jg;gl;ltu;fspy; $ypj;njhopy; (tPl;LNtiy> Foe;ij guhkupg;G) 28 tPjkhNdhu;fSk;> ntspehl;by; Ntiy nra;Nthu; 12 tPjkhNdhu;fSk;> czTg;nghUl;fis tpw;gid nra;Nthu; (,bag;gk;> Njhir> gpl;L kw;Wk; mg;gk; tpw;gid) 34 tPjkhNdhu;fSk;> Njhl;l Ntiy kw;Wk; tay; Ntiyfspy; (fjpu; vLf;fr; nry;Yjy;> fis vLj;jy;) 17 tPjkhNdhu;fSk;> rpwpa filfis itj;J tpahghuk; Nkw;nfhs;Nthu; 09 tPjkhNdhUk;> <Lgl;Ls;sdu;. NkYk; Ma;Tf;Fl;gLj;jg;gl;l ,tu;fspy; 92 tPjkhNdhu;fs; rKu;j;jp cjtpj; njhif ngWfpd;wikAk; ,q;F Fwpg;gplj;jf;fJ. ,jid tiuglk; 8.1 tpsf;Ffpd;wJ.

**tiuglk;: 8.1 njhopy; tiffs;**




**மூலம்: கள ஆய்வு, (2019).**

இத்தகைய தொழில்களை மேற்கொண்ட போதும் இவை நிரந்தரமான தொழிலாக அமையவில்லை என்றும், அத்தொழில் மூலம் கிடைக்கின்ற வருமானம் வாழ்க்கையினை நடாத்துவதற்கு போதியதாக இல்லை என்றும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கணவனை இழந்த பெண்கள் குறிப்பிட்டனர். இது தொடர்பாக A (வயது- 36) என்ற பெண்ணிடம் வினாவிய போது,

> "*அவர் செத்த பிறகு என்ன தொழில செய்யிற என்டே தெரியயுமில்லை. பிறகு அங்க இஞ்ச என்டு கடன்பட்டு சின்னதா ஒரு கடைய ஓலையால கட்டி அரிசி, பருப்பு சாமான வித்தன். அதுவும் சரியான நட்டத்தில போயித்து. அத விட்டுத்து இப்ப இடியப்பம் அவிச்சு கடையளுக்கு குடுக்கிறன். அதில வாற வருமானமும் சாப்பாட்டுச் செலவுக்கே காணாது*" எனக் குறிப்பிட்டார்.


**8.2. வருமானம் போதாமை**

ஒருவனுடைய நிலையானது அவன் செய்யும் வேலை மற்றும் பொருளாதார நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றது. பொருளாதார நிலைமை என்பது வருமானத்தின் அளவினைச் சுட்டி நிற்கின்றது.[19] அந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள கணவனை இழந்த மக்கள் குறைந்த வருமானம் பெறுவதற்கு அவர்களால் மேற்கொள்ளப்படும் தொழில்களே காரணமாகவுள்ளது. இப்பெண்களில் அதிகமானவர்கள் நிரந்தர தொழிலற்றவர்களாகவும், குறைந்த கல்வித் தகைமையுடையவர்களாகவும், உயர்ந்த வருமானத்தினைப் பெறுவதற்கான தொழிலினை மேற்கொள்ள முடியாதவர்களாகவும் உள்ளனர். இதனால் இவர்கள் கிடைக்கும் தொழிலைச் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் பல விதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

[19] கிருஸ்ணமுர்த்தி.ஜெ, 2000, "சமூகவியல் கோட்பாடுகள்", பக்:160

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகள் அனைவருமே (100%) வாழ்க்கையினை முன்கொண்டு செல்வதற்கு வருமானம் போதியதாக இல்லை எனக் குறிப்பிட்டனர். ,tu;fspy; 18 வீதமானோர்கள் ரூபா.3,000க்குக் குறைந்த வருமானத்தினையும், 76 வீதமானோர்கள் ரூபா.3,001 தொடக்கம் ரூபா.5,000 வரை வருமானம் பெறுபவர்களாகவும், 06 வீதமானோர்கள் ரூபா.5,001 தொடக்கம் 10,000 இற்குள் வருமானம் பெறுவர்களாகவுள்ளனர். இதனை வரைபடம் 8.2 விளக்குகின்றது.


**வரைபடம்: 8.2 வருமான மட்டம்**




**மூலம்: கள ஆய்வு, (2019).**

குடும்பத்தின் வருமானம் போதாமையினால் உணவுத் தேவையினை பூர்த்தி செய்ய முடியவில்லை என 29 வீதமானோர்களும், பௌதீக ரீதியான வளப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய முடியாமலுள்ளதாக 21 சதவீதமானோர்களும், கடன்களைப் பெற வேண்டிய நிலை ஏற்படுவதாக 18 வீதமானோர்களும், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உதவியைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாக 09 வீதமானோரும், பிள்ளைகளது விருப்பங்கள் நிறைவு செய்ய மற்றும் மருத்துவ செலவுகளை மேற்கொள்ள முடியவில்லை என 07 வீதமானோரும், பிள்ளைகளது கல்விக்கான செலவினை மேற்கொள்ள முடியவில்லை என 04 வீதமானோரும், பிள்ளைகளது பாடசாலைக் கற்றலை இடைநிறுத்தி தொழிலுக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டதாக 04 வீதமானோர்களும், குடும்பச்சுமையைக் குறைக்க இளவயதுத் திருமணங்களைச் செய்ய வேண்டி ஏற்பட்டதாக 03 வீதமானோர்களும், சமூகத்தில் ஓரங்கட்டப்படுவதாக 05 வீதமானோரும் குறிப்பிட்டிருந்தனர். இதனை வரைபடம் 8.3 விளக்குகின்றது.

**வரைபடம்: 8.3 வருமானம் போதாமையினால் ஏற்படும் சிக்கல்கள்**




**மூலம்: கள ஆய்வு, (2019).**

இந்திரரத்ன (Indraretne,1992) என்பவர் "உயர் வறுமையானது அபிவிருத்திக்கான பெரும் சவாலாகவும் முட்டுக்கட்டையாகவும் காணப்படுகின்றது. குறைந்த வருமானம், வாழ்வாதாரத்துக்கான சந்தர்ப்பங்கள் இல்லாமை என்பவற்றால் வறுமை ஏற்படுகின்றது. இதன் காரணமாக வறுமையிலுள்ள மக்கள் வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளையும் உணவு, உறையுள் என்பனவற்றையும் பெறமுடியாது உள்ளனர்" (ஸ்ரீகாந்தன்.இ:2008,446) என்ற கருத்து ஆய்வு முடிவிற்கு வலுச்சேர்ப்பதாகவுள்ளது. மேலும் இப்பெண்கள் 92 வீதமானோர் வங்கிகளில் சேமிப்புக் கணக்குகளைக் கொண்டிருக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தனர்.


மேற்குறிப்பிட்ட ஆய்வு விடயம் தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் முன்வைத்த கூற்றுக்களில் B (வயது 48) என்ற கணவனை இழந்த பெண் கூறுகையில்,

> *"இவங்கட அப்பா இருக்கும் வரைக்கும் வீட்டுச் செலவுக்கு ஏதோ ஒரு மாதிரி போனது. அதுக்குப் பிறகு தான் சரியான கஷ்டமா கிடக்கு. எனக்கு என்ன வேலைய தான் செய்ய தெரியும். சும்மா இருந்தா வருமானம் வராதே என்டு போட்டு வீட்டு வேலைக்கு போறனான். இப்ப கொஞ்ச நாள வருத்தமா கிடக்கு. அது தான் ஒழுங்கா போறதுமில்லை. சாப்பாட்டுச் செலவுக்கே பெரும்பாடா போகுது"* எனக் கூறினார்.

**8.3. கடன்கள் மற்றும் உதவிகளைப் பெறல்**

வருமானம் ஈட்டக்கூடிய நிரந்தர தொழிலின்மை, வருமானம் வாழ்க்கையினை நடாத்துவதற்கு போதியதாக இல்லாமை போன்ற காரணங்களினால் தமது தேவையினை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கணவனை இழந்த பெண்கள் பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு உட்படுகின்றனர். இந்நிலையில் அவர்கள் கடன்களையோ, உதவிகளையோ எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட போது 57 வீதமானோர் கடன்களை பெறுவதாகவும், 11 வீதமானோர் உதவிகளைப் பெறுவதாகவும், 32 வீதமானோர் கடன்கள் மற்றும் உதவிகளைப் பெறுவதாகவும் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 8.4 விளக்குகின்றது.

**tiuglk;: 8.4 fld;fs; kw;Wk; cjtpfisg; ngwy;**




**மூலம்: கள ஆய்வு, (2019).**

அரச நிறுவனங்களை (13 வீதமானோர்) விட அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தே (87 வீதமானோர்) அதிகமானோர் கடன்களை பெற்றுள்ளதுடன், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உதவிகளையும் பெற்றுள்ளனர். மேற்குறிப்பிட்ட ஆய்வு விடயம் தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் முன்வைத்த கூற்றுக்களில் C (வயது 41) என்ற கணவனை இழந்த பெண் கூறுகையில்,

*"உழைக்கிற காசு எல்லாருக்கும் சாப்பாட்டுக்கேகாணாது. தெரிஞ்சவங்களிட கடன் வேண்டித் தான் வாழ வேண்டிக் கிடக்குது. வேண்டின கடன் திரும்ப குடுக்கிறதுக்கே கடன் வேண்ட வேண்டிக்கிடக்குது. எப்பதான் இந்த கடன் தொல்லை முடியுமோ?"-* என்று பெருமூச்சுடன் கூறினார்.

### 8.4. பௌதீக ரீதியான வளப்பற்றாக்குறைகள்

1995ம் ஆண்டு கோப்பன் ஹாகன் (Copen Hahen) என்னுமிடத்தில் இடம்பெற்ற சமூக அபிவிருத்திக்கான உச்சிமாநாட்டில் பெறப்பட்ட சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஐக்கியநாடுகள் தாபனத்தின் பிரகடனமானது, "உணவு, பாதுகாப்பான குடிநீர், மலசலகூட வசதிகள், சுகாதாரம், வசிப்பிடம், கல்வி, தகவல் உள்ளடங்கலாக அடிப்படை மனிதத் தேவைகளின் கடுமையான இழப்பினால் எடுத்துக்காட்டப்படும் ஒரு நிலையை பூரண வறுமை" என வரையறை செய்தது (ஸ்ரீகாந்தன்.இ:2008,409). இக்கருத்திற்கமைவாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கணவனை இழந்த பெண்களது வதிவிடம், குடிநீர் வசதி, மின்சார வசதி, மலசலகூடம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு பௌதீக ரீதியிலான வளப்பற்றாக்குறை தொடர்பாக நோக்கமுடியும்.


#### 8.4.1. வதிவிடம்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களது இருப்பிடத்தின் தன்மை பற்றி நோக்குமிடத்து, இங்கு கல் வீடுகளும் (NEHRP நிறுவனம் உலக வங்கியுடன் இணைந்து அமைத்துக் கொடுக்கப்பட்டவை), ஓலை வீடுகளும், பகுதியளவு கல் சுவரும், மிகுதியான பகுதி தகரமும் கொண்ட வீடுகளும், தகரம் மற்றும் படங்குகளைக் கொண்டு அமைக்கப்பட்ட வீடுகளும் காணப்படுவதுடன், அவை இடவசதி குறைந்ததாகவும் காணப்படுகின்றமையினை ஆய்வாளரால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சிறுவர்களின் இருப்பிடம் பற்றி ஆராயப்பட்ட போது, 31 வீதமானோர்கள் கூரைகளுக்காக ஓடுகளையும், 47 வீதமானோர்கள் கூரைகளுக்காக தகரத்தினையும், 22

வீதமானோர்கள் கூரைகளுக்காக ஓலையையும் பயன்படுத்தியுள்ளதுடன், 31 வீதமானோர்கள் சுவர்களுக்காக கல்லையும், 15 வீதமானோர்கள் சுவர்களுக்காக பகுதியளவு கல் சுவர்களுடன் தகரம் மற்றும் ஓலையையும், 18 வீதமானோர்கள் சுவர்களுக்காக ஓலையையும், 36 வீதமானோர்கள் தகரத்திலான சுவர்களையும் பயன்படுத்தி உள்ளனர். வீடுகளின் நிலத்திற்கு 52 வீதமானோர்கள் சீமெந்தினையும், 32 வீதமானோர்கள் சீமெந்தினையும், மணலையும், 16 வீதமானோர்கள் மணலையும் இட்டுள்ளனர். இதனை வரைபடம் 8.5 விளக்குகின்றது.

**வரைபடம்: 8.5 வீடுகளின் தன்மை**




**மூலம்: கள ஆய்வு, (2019).**


மேற்குறிப்பிட்ட ஆய்வு விடயம் தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் முன்வைத்த கூற்றுக்களில் D (வயது 28) என்ற கணவனை இழந்த பெண் கூறுகையில்,

> "*எங்கட வீட்ட ஒரு மண்டகமும், சமைக்கிறதுக்கு இந்தக் கொட்டிலும் தான் இருக்கு. வெயில் காலங்களில தகரம் என்டதால சரியான வெக்க. இரவில இந்தக் கொட்டிலுக்குள நித்திரை கொள்ளவும் ஏலாது. இடவசதி காணாது*" எனக் குறிப்பிட்டார்.

**8.4.2. குடிநீர் வசதி, மலசலகூட வசதி, மின்சார வசதி**

குடிநீர், மலசலகூடம், மின்சாரம் போன்ற வசதிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட போது, 54 வீதமானோர்கள் கிணற்றின் மூலம், 36 வீதமானோர் குழாய் கிணற்றின் மூலம், 10 குடிநீர் இணைப்பின் மூலமும், அயல் வீடுகளிடமிருந்தும் பெற்றுக் கொள்கின்றனர். வீதமானோர் மலசல கூட வசதியினைக் கொண்டிருப்பதாகவும், வீதமானோர் மலசலகூட வசதியினைக் கொண்டிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டனர். மேலும் மின்சார வசதியினை வீதமானோரும், ஏனைய வழிமுறைகளான மண்ணெய் விளக்கு, மெழுகுதிரி என்பவற்றிலிருந்து ஒளி பெறுவதாக வீதமானோரும் தெரிவித்தனர். இதனை வரைபடம் 8.6 விளக்குகின்றது.

**வரைபடம்: 8.6 குடிநீர் வசதி, மலசலகூட வசதி, மின்சார வசதி**




**மூலம்: கள ஆய்வு, (2019).**

**முடிவுரை**

நிரந்தர தொழிலின்மை, வருமானம் போதாமை, கடன்கள், பௌதீக வளப்பற்றாக்குறை போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது கணவனை இழந்த பெண்கள் பொருளாதார நிலைமைகளில் பின்தங்கியுள்ளமை நன்கு புலனாகின்றது. இதனடிப்படையில் கணவனை இழந்த பெண்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளர் என்ற ஆய்வுக் கருதுகோள் வாய்ப்புப் பார்க்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**9. பரிந்துரைகள்**

பொருளாதாரம் எனப்படுவது குறித்த ஒரு சமூகத்திற்கான உற்பத்தி, விநியோகம், பொருட்கள், சேவைகள் என்பவற்றுடன் தொடர்புடையது. பொருளாதாரச் சிக்கல்கள் வாழ்க்கையின் ஒரு கடினமான தன்மை உடையதாக மாறுகின்றது. அந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளமையினால் பல்வேறு கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். ஆதனை இயன்றளவு தவிர்த்துக் கொள்வதற்கான பரிந்துரைகள் பின்வருமாறு அமைகின்றன.

**9.1. நிரந்தர தொழிலின்மை**

- குடும்ப மட்டத்தில் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இத்திட்டங்களை அரசாங்கத்தினாலோ, அரசசார்பற்ற நிறுவனங்களினாலோ முன்வைக்கப்படலாம்.
- கிராம மட்டங்களில் சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, முன்கொண்டு செல்ல அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவலாம்.
- வறிய மக்களை இனங்கண்டு, வாழ்வாதாரச் தேவைகளை கண்டறிந்து, அவற்றை வழங்கக் கூடிய துறைகளை இனங்கண்டு திட்டமிடல்களை மேற்கொள்ளலாம். இதன் மூலமாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும்.
- நுண்பொருளாதார வாய்ப்புக்களை இனங்கண்டு வறியவர்களின் வருமானத்தைக் கூட்டிக் கொள்ளும் வழிவகைகளைப் பின்பற்றலாம்.

**9.2. வருமானம் போதாமை**

- ஆய்வுப் பிரதேசத்தின் நில வளத்தினை பயன்படுத்தும் திட்டங்களை அறிமுகப்படுத்துதலும், வருமானத்தினை ஈட்டக்கூடிய பயிர்செய்கை முறையினை திட்டமிட்டு மேற்கொள்ள அறிவூட்டி, ஆலோசனைகளை வழங்கி வழிப்படுத்தலாம் (உதாரணமாக- முந்திரிகைச் செய்கை.)

- போதியளவு வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழில்களை இனங்கண்டு, அவற்றினை மேற்கொள்வதற்கான உதவிகளை முன்னெடுப்பதுடன், தொழிற்திறனை முன்னேற்றுதலும், ஆலோசனை வழிகாட்டலை மேற்கொள்ளலும்
- மானியங்கள், வங்கிக் கடன்கள் என்பவற்றின் மூலம் தொழில்களை மேற்கொள்வதற்கான கடனுதவிகளை வழங்குவதன் மூலமும், அவர்களுக்குப் பரீட்சியமான தொழில்களைச் செய்ய ஊக்குவிப்பதன் மூலமும் அவர்களது வருமானத்தினை அதிகரிக்கலாம்.
- குடும்பத்திற்கான வருமானத்தினை ஈட்டும் வகையிலான குடிசைக் கைத்தொழில்களை ஏற்படுத்த வழிப்படுத்தல் மற்றும் அவர்களிடம் காணப்படும் வளங்களையும், திறன்களையும் பயன்படுத்தி கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு துணைபுரிய அரசாங்கமும், தனியார் அமைப்புக்களும் முன்வருதலும், சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தலும்.
- குறுங்காலத் திட்டங்கள், நீண்டகாலத் திட்டங்கள் என்ற அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள மக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களை அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கலாம்.

**9.3. கடன் மற்றும் உதவிகள்**

- பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்கு வட்டி விலக்கழிக்கப்பட்டு மீளப் பெற ஆவண செய்யலாம்.
- வருமானம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி அதன் மூலம் கடன்களை மீளப்பெறலாம்.

**9.4. பௌதீக ரீதியிலான வளப்பற்றாக்குறை**

**9.4.1. வதிவிடம் போதாமை**

- வீடுகளை அமைப்பதற்கு அல்லது திருத்துவதற்கான உதவிகளை வழங்க அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மக்களை பங்குதாரர்களாகக் கொண்டு செயற்படலாம்.

**9.4.2. குடிநீர், மலசலகூட வசதி , மின்சார வசதி**

- குடிநீர், மலசலகூடம், மின்சார வசதியற்றவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன் வருதல்.
- போதியளவு வெளிச்சத்தினைக் கொண்ட மின் சேமிப்பு விளக்குகளை (Charger light) வழங்குவதுடன், இதற்கான மின்சக்தியை மின்சார சபைகளின் உதவியுடன் பெற்றுக் கொடுக்கலாம்.
- சூரியனிலிருந்து மின்சேமிப்பினை மேற்கொள்வதற்கான இணைப்பினை பொது இடங்களிலோ, வீடுகளிலோ அமைத்து குறைந்த கட்டணத்துடனோ, இலவசமாகவோ, நிபந்தனையின் பேரிலோ மின்சக்தியை வழங்கலாம்.

கணவனை இழந்த பெண்களது பின்தங்கிய பொருளாதார நிலைமைகளிலிருந்து அவர்கள் முன்கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் குறித்த குடும்பத்தினதும், சமுதாயத்தினதும் விருத்திக்கு மாத்திரமன்றி நாட்டினுடைய விருத்திக்கும் வழியமைக்கும்.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**

குமுதினி, சா. (2000). நோக்கிலான பெண், இலங்கை: பெண்கள் ஆராய்ச்சி நிலையம்.

சரோஜா, சி. (2013). வட மாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், யாழ்ப்பாணம்: மகளிர் அபிவிருத்தி நிலையம்.

ஜெகன், பெ. (தமிழலாக்கம்- இந்திரா, கோ.). பெறுபேறற்ற யுத்தமும், அதில் மனித இழப்புக்களும், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம். (5-6)

சின்னத்தம்பி, க. (2011). கல்வி ஆய்வியல். 2ம் பதிப்பு, கொழும்பு-11: சேமமடுப் பதிப்பகம்.

கிருஸ்ணமுர்த்தி.ஜெ. (2000). சமூகவியல் கோட்பாடுகள், இந்தியா: அண்ணாமலை பல்கலைக்கழகம்.

**சஞ்சிகைகள்**

உதயனி,ந. (2011). இரண்டாம் அரையாண்டு, சொல் (பெண்ணியத்தின் மகத்துவம்), "யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களின் பிரச்சினைகள்", கொழும்பு-08: பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு. (34-37)

உதயனி, ந. (2012). நங்கை (இதழ்-37), "யாழ்ப்பாணத்துப் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்", யாழ்ப்பாணம்: மகளிர் அபிவிருத்தி நிலையம். (17- 23)

கலாமணி, த. (2014). கடல், இதழ்-07, "இலக்கிய மீளாய்வை விளங்கிக் கொள்ளல்" கலை அகம். (32)

காயத்திரி,ந. (2011). இரண்டாம் அரையாண்டு, சொல் (பெண்ணியத்தின் மகத்துவம்), "தனித்துவிடப்பட்ட பெண்களினதும், குழந்தைகளினதும் வாழ்வாதாரச் சிக்கல்கள்", கொழும்பு-08: பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு. (47-48)

குணா, (2012). பெண், (தொகுதி-17, இலக்கம்-02), மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம். (7)

பத்மா, சோ. 1998, பெண்ணின் குரல் (பெண்ணின் உரிமைக்கான இலங்கைச் சஞ்சிகை- இதழ் 17), "பெண்தலைமைத்துவக் குடும்பங்கள்", கொழும்பு-05: பெண்ணின் குரல் வெளியீடு. (31-32)

பிரியதர்ஷினி, இ. (1998). பெண்ணின் குரல் (பெண்ணின் உரிமைக்கான இலங்கைச் சஞ்சிகை- இதழ் 17), "புதிதாகக் கட்டியெழுப்புதல்", கொழும்பு-05: பெண்ணின் குரல் வெளியீடு. (15-19)

வாசுகி, ஜெ. (1998). பெண், தொகுதி-III , இலக்கம்- 1, "மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்கள்", மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம். (9-14)

**ஆய்வறிக்கைகள்**

Naomi, H. and Samila, H. (1995), "Problems of the women headed households", Dhaka, Bangaladesh: The BRAC- ICDDR, B Joint Research Project. (1-47)

Fatemeh, Maleki. Mojtaba, Maleki. Mansoureh, Maleki. and Somayyeh, Mirziee. (2016 issue), "Social, Cultural and Economic Situation of Female – Headed Households of Imam Khomeini Relief Committee (Tehran Province 2011)", International Journal of Humanties and Cultural Studies. (1598-1607)

**பத்திரிகை**

வாணி, (2012.03.15), தினமுரசு வார மலர், "பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக நிலைமை", பக்:17